
# விக்டோரியாவின் குழந்தைப் பாதுகாப்புத் தரநிலைகள்

எளிய மொழிச் சுருக்கம்


## 1




உங்கள் நிறுவனம் பழங்குடியினக் குழந்தைகளை வரவேற்கிறது. அவர்களது கலாசாரத்தை வெளிப்படுத்தவும் அவர்களது உரிமையை அனுபவிக்கவும் நீங்கள் ஆதரவளிக்கிறீர்கள். இனவெறியை நீங்கள் அனுமதிப்பதில்லை.


## 2

உங்கள் நிறுவனத்தின் அனைத்து மட்டங்களில் உள்ள அனைவருக்கும் குழந்தைப் பாதுகாப்பு முக்கியமானது. குழந்தையின் மீது தவறான பயன்பாடு அல்லது தீங்கு ஏற்படும் ஆபத்தைக் கண்டுபிடிப்பது, தடுப்பது மற்றும் நிறுத்துவது எப்படி என்பதை நீங்கள் ஆவணப்படுத்துகிறீர்கள்.



## 3

தவறான பயன்பாட்டில் இருந்து பாதுகாப்பாக இருக்கும் தமது உரிமைகளை குழந்தைகள் அறிந்திருப்பதை உங்கள் நிறுவனம் ஆதரிக்கிறது. அவர்கள் வெளிப்படையாகப் பேசுவதற்கும் தங்களைப் பாதிக்கும் முடிவுகளை எடுப்பதில் பங்கேற்பதற்கும் நீங்கள் உதவுகிறீர்கள்.




## 4

நீங்கள் என்ன செய்கிறீர்கள், மேலும் தீங்கு மற்றும் தவறான பயன்பாட்டிலிருந்து குழந்தைகளை எவ்வாறு பாதுகாப்பாக வைக்கிறீர்கள் என்பதை குடும்பங்களுக்கும் சமூகத்திற்கும் உங்கள் நிறுவனம் கூறுகிறது. தங்கள் குழந்தையைப் பாதிக்கும் முடிவுகளை எடுப்பதில் பங்கேற்கவும் அதில் அவர்களது கருத்தைத் தெரிவிக்கவும் குடும்பங்களுக்கு நீங்கள் உதவுகிறீர்கள்.



## 5


ஒவ்வொரு குழந்தையும் வெவ்வேறானவர்கள் மேலும் அவர்களுக்கு வெவ்வேறு தேவைகள் உள்ளன என்பதை உங்கள் நிறுவனம் புரிந்துகொள்கிறது. அவர்களுக்குத் தேவைப்படும் தகவல் மற்றும் உதவியைப் பெறுவதை நீங்கள் உறுதிப்படுத்துகிறீர்கள்.



## 6

குழந்தைகளைத் தவறான பயன்பாடு மற்றும் தீங்கில் இருந்து பாதுகாப்பாக வைக்க என்ன செய்யவேண்டும் என்பதைப் பணியாளர்கள் அறிவார்கள். குழந்தைப் பாதுகாப்புத் தொடர்பான தகவலை அவர்கள் செய்ய வேண்டிய நேரத்தில் பதிவு செய்வார்கள், புகாரளிப்பார்கள் மற்றும் பகிர்வார்கள். குழந்தைகளுடன் பணிபுரியும் பணியாளர்களுக்குத் தேவைப்படும் பொழுது பின்புல சரிசோதனைகளை மேற்கொண்டுள்ளனர்.





## 7

எவ்வாறு புகாரளிப்பது மற்றும் புகாரளித்தால் என்ன நடக்கும் என்பதை குழந்தைகளும் அவர்களது பெற்றோர்களும் அறிவார்கள். புகார்களுக்கு முறையாகப் பதிலளிப்பது எப்படி என்பதை உங்கள் பணியாளர்கள் அறிந்துள்ளார்கள்.



## 8

குழந்தைகளைத் தவறான பயன்பாடு மற்றும் தீங்கில் இருந்து பாதுகாக்க பணியாளர்களுக்கு பயிற்சியும் ஆதரவையும் உங்கள் நிறுவனம் வழங்குகிறது. குழந்தைத் தவறான பயன்பாடு மற்றும் தீங்கின் அறிகுறிகளையும் மேலும் தவறான பயன்பாடு மற்றும் தீங்கு ஏற்பட்டால் என்ன செய்யவேண்டும் என்பதையும் உங்கள் பணியாளர்கள் அறிவார்கள்.




## 9

உங்கள் சேவைகள், அமைப்புகள் மற்றும் செயல்பாடுகளைப் பயன்படுத்தும் பொழுது குழந்தைகள் பாதுகாப்பாக உள்ளதை உங்கள் நிறுவனம் உறுதிசெய்கிறது. குழந்தைகள் இணையத்தில் இருக்கும் பொழுதையும் இது உள்ளடக்குகிறது.



## 10

குழந்தைகளைத் தவறாகப் பயன்படுத்தல் மற்றும் தீங்கில் இருந்து பாதுகாப்பாக வைக்கும் வழிகளை உங்கள் நிறுவனம் சரிபார்த்து மேம்படுத்துகிறது.



## 11

குழந்தைகளைத் தவறான பயன்பாடு மற்றும் தீங்கில் இருந்து பாதுகாப்பாக வைப்பதற்கு உங்கள் நிறுவனத்தில் எழுதப்பட்ட கொள்கைகள் உள்ளன. அவை புரிந்துக்கொள்ள எளிதானவை, மேலும் அனைத்துப் பணியாளர்களும் அவற்றைப் பின்பற்றுகிறார்கள்.




மேலும் தகவலுக்கு, குழந்தைகள் மற்றும் இளம்வயதினருக்கான ஆணையத்தைத் தொடர்பு கொள்ளவும்

**www.ccyp.vic.gov.au**

COMMISSION FOR CHILDREN AND YOUNG PEOPLE